வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 05/2024

வழக்கு சாட்சி – ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: நாகராஜ் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 27.01.2026.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.35 மணி)

நான் மனுதாரரின் தகப்பனார் ஆவேன், என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. ஆசிக் மருத்துவமனை மருத்துவ பில் ம.சா.ஆ.2. பிசியோதெரபி கிளினிக் பில் ம.சா.ஆ.3. ஆசிக் மருத்துவமனையில் வழங்கப்பட்ட எதிர்கால மருத்துவ செலவுகளுக்கான மருத்துவ சான்று ம.சா.ஆ.4. மனுதாரரின் 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் ம.சா.ஆ.5. மனுதாரரின் 12ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் ம.சா.ஆ.6. மனுதாரரின் அண்ணா பல்கலைக்கழக B.E படிப்பிற்கான சான்று ம.சா.ஆ.7. (ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.7 ஆகிய ஆவணங்கள் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது.) மனுதாரரின் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.27 17:11:49 +0530

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என் மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது ஆகும். விபத்து சமயம் எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் கிடையாது. விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. ம.சா.ஆ.3 பில்லில் நோயாளியின் பெயர் மற்றும் விபரங்கள் இல்லை என்றால் அந்த விபரங்கள் 2ம் பக்கத்தில் உள்ளது. அதனை வழங்கிய மருத்துவரை விசாரித்தால் தான் அதன் உண்மை தன்மை பற்றி தெரியவரும் என்றால் சரியல்ல. பிசியோதெரபிஸ்ட் எங்கள் வீட்டிற்கு வந்து என் மகனுக்கு பிசியோதெரபி சிகிச்சை வழங்குகிறார். பிசியோதெரபிஸ்ட் கொடுக்கும் சிகிச்சைக்கு அன்றைய தினமே பில் ரசீது கொடுக்கும் பழக்கம் கிடையாது. ம.சா.ஆ.3 பில்லில் அதனை வழங்கிய தேதி இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 பில் நான் கேட்டுக்கொண்டதன் பேரில் பிசியோதெரபிஸ்ட் வழங்கியுள்ளார் என்றும் அது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆவணம் 2022ம் ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொன்னபடி ஆசிக் மருத்துவமனையில் எதிர்கால சிகிச்சை செய்து வருகிறோம். ம.சா.ஆ.2 பில்லுக்கான மருத்துவ பரிந்துரை சீட்டுகள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பரிந்துரை சீட்டுகளை தாக்கல் செய்ததால் தான் நாங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டோமா இல்லையா என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. என் மகனுக்கு தலையிலும், காலிலும் காயங்கள் ஏற்பட்டது. மருத்துவமனையிலிருந்து என் மகன் விடுவிக்கப்பட்டபோது கொடுக்கப்பட்ட Discharge Summary தாக்கல் செய்யவில்லை. 02.01.2022ம் தேதிக்கு பிறகு ஆசிக் மருத்துவமனையிலோ அல்லது வேறு ஏதாவது மருத்துவமனையில் என் மகன் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என் மகனுக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் தன்மை காண்பிக்கக்கூடிய புகைப்படங்கள் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். விபத்து

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.27 17:11:55 +0530

சமயம் எனது மகன் தான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், விபத்திற்கு என் மகன் தான் காரணம் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் முறையாக சாலை விதிகளை கடைபிடித்து வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்காமல் விபத்து சமயம் என் மகன் ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் மிகைப்படுத்தி இழப்பீட்டு தொகை கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.01.27 17:12:01 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.